RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2130

OPEN ACCESS

# எடுத்துரைப்பியல் நோக்கில் முல்லைப்பாட்டில் நிகழ்ச்சி அமையும் நிலைகள்

ச. காயத்ரி [அ, *], ம. தங்கராசு [அ]

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600030, தமிழ்நாடு, இந்தியா

# Stages of Action in Mullai Songs from a Rhetorical Point of View

C. Gayathri [a, *], M. Thangaraazu [a]

[a] Department of Tamil, Pachayappas College, Chennai-600030, Tamil Nadu, India

* Corresponding Author: gayathirivijaya89@gmail.com

Received: 10-08-2022
Revised: 30-09-2022
Accepted: 08-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Mullai songs is the fifth song in Pattupattu. It contains 103 beats, composed by Asiriyappa and authored by Napothanar. Mullai songs are about the lifestyle of Mullai regional people. It is also about the separation of husband from his wife and she waits for him patiently. In Mullai region the white flower is seen as a symbol of chastity while the mulberry flower symbolizes chastity. The location of Mullai land is forest and forested area. Motifs belonging to Mullai land are thirumal, kannai flower, mullai flower, and deer etc, and takes place in the Mullai songs.

**Keywords:** Mullai Songs, Mullai Region, Thirumal, Rhetorical Point

## முன்னுரை

பத்துப்பாட்டுள் இது ஐந்தாவது பாட்டு 103 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆனது இதன் ஆசிரியர் நப்பூதனார். முல்லைத்திணைக்குரிய ஒழுக்கத்தைப் பற்றிப் பேசுவது முல்லைப்பாட்டு ஆகும் பிரிந்துச் சென்ற தலைவன் வரும் வரையில் தலைவி பொறுத்துக் கொண்டிருப்பது முல்லையொழுக்கமாகும். இந்த முல்லைத்திணையை கற்பொழுக்கம் என்றும் சொல்லுவர் முல்லைக்கும் சில அடையாளங்கள் இருக்கின்றன. முல்லைப் பூ கற்பின் அடையாளமாக குறீயிடாகப் பார்க்கப்படுகிறது. முல்லைச் சான்ற கற்பின் மெல்லியள் என்பது அகநானூறு உலகளாவிய நிலையில் வெண்மை நிறப் பூ கற்பின் குறியீடாக பார்க்கப்படுகிறது. முல்லை நிலத்தின் இடம் என்பது காடும் காடு சார்ந்த இடமும் ஆகும்.காலம் கார்காலம் மாலைப் பொழுதும் ஆகும். முல்லை நிலத்திற்குரிய கருப்பொருட்களான திருமால், கொன்றை மலர், முல்லை மலர், மான்கள் போன்றவை முல்லைப்பாட்டில் இடம் பெறுகின்றன.

## நிகழ்ச்சி அமையும் நிலைகள்

ஜெரால்டு, பிரின்ஸ், நிகழ்ச்சியானது நிலைத்தன்மை அல்லது இயங்கு நிலையில் ஒன்றுக்கொன்று தொடர்புக் கொண்டிருக்கும் என்கிறார். அவர் நிகழ்ச்சியின் அமையும் நிலைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார். காலத்தொடர்பு, இடத்தொடர்பு, காரணத்தொடர்பு, மாறுபாடு, இயைபு, சூழல்கள் மற்றும் செயல்களின் கூட்டு, கதைமாந்தர் ஆகியவையாகும் எனவே நிகழ்ச்சி என்பது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவதால் உண்டாகிறது என்பதையும்

அந்நிகழ்ச்சிகள் தலைப்பிடுதல் எளிய வாக்கியங்களாக எழுதுதல் என்ற முறையில் வாசகர்களால் புரிந்துக் கொள்ளப்படுகின்றன.

## மயங்கும் திணை ஒழுக்கம்(காலத் தொடர்பு)

ஒவ்வொரு நிலத்திற்கும் ஒருவகை ஒழுக்கமாகி ஐவகை நிலத்திற்கும் ஐவகை ஒழுக்கத்தை இலக்கண மிட்டுக் காட்டுகிறது தொல்காப்பியம்குறிஞ்சியில் புணர்தலும் புணர்தல் நிமித்தமும், முல்லையில் இருத்தலும் இருத்தல் நிமித்தமும், நெய்தலில் இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பாலையில் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என நிலத்திற்கான ஒழுக்கங்களாக வரையறுத்துள்ளனர் நம் முன்னோர். அவ்வாறே முல்லை நிலத்தில் தலைவியும் தலைவனும் பிரிவு வந்துற்ற போது, தலைவியானவள் தலைவன் வரும் வரை அவன் வருகையை நோக்கி ஆற்றி இருத்தல் வேண்டும் அழுது அரற்றுதல் கூடாது. அவ்வாறு அழுது அரற்றுவாள் ஆயின். அத்திணை ஒழுக்கம் இரங்கல் நிமித்தமாகிய நெய்தல் நிலத்திற்கு உரியதாக மாறி விடும் முல்லைப்பாட்டில் தலைவி கார்காலம் துவங்கியும் வராத தலைவனை நோக்கி துயர் கொள்கிறாள் அவளது வாட்டத்தைப் போக்க பெருமுது பெண்டிர் பல்வேறு விதமாகத் தேற்றுகிறார்கள் எனினும் தேறாதவளாகிய தலைவியின் கண்களில் கண்ணீர் அரும்புகிறது என்கிறார் நப்பூதனார்

"பருவரல் எவ்வம் களை மாயோய் எனக்

காட்டவும் காட்டவும் காணாள் கலுழ் சிறந்து"

இவ்விடத்தே நுட்பமானதொரு திணை மயக்கத்தை ஆய்வு செய்து புலப்படுத்துகிறார் உரைவேந்தர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் முல்லை ஒழுக்கத்தில் தலைவனை நினைத்து ஆற்றியிருக்க வேண்டிய தலைமகள் அதனையும் தாண்டி துயர் கொள்கிறாள். எனவே அவளது கண்களில் கண்ணீர் பெருகிறது. ஆனால் அக்கண்ணீர் துளிகளாகி சிந்தி விடுமேயாகில் அது நெய்தல் திணைக்குரிய இரங்கல் நிமித்தமாகி விடும் அதனைத் தவிர்க்க முல்லை நிலத்தின் ஒழுக்கத்தை நிறுவிக்காட்டி தலைமகள் கண்களில் துளிர்ந்த கண்ணீர் வீழ்ந்து படாமல் கண்களில் உருண்டு திரண்டு நிற்பதாகக் காட்டி நிறுத்துகிறார் (Balasubramanian, 2004).

முல்லைப்பாட்டில் முதல் நிகழ்ச்சியில் முல்லை நிலத்தின் உரிப்பொருளின் இருத்தல் நிமித்தத்தை கட்டமைத்து அகத்திணை ஒழுக்கமாகிய நெய்தல் நிலத்திற்கு உரியதாக இரங்கல் நிமித்தத்தை மாற்றிவிடமால் காரணமாகிய உறவுக் கோட்பாட்டைப் பயன்படுத்தி கதையில் எந்த ஒரு பிரச்சினையும் எழுவதற்கு வழியில்லாமல் கதையாசிரியர் செய்கிறார் முதல் நிகழ்ச்சி தலைவனை நினைத்து ஆற்றியிருக்க வேண்டிய தலைமகள் அதனையும் தாண்டி துயர் கொள்கிறாள். இரண்டாவது நிகழ்ச்சி அவளது கண்களில் கண்ணீர் பெருகிறது ஆனால் அக்கண்ணீர் துளிகளாகி சிந்தி விடுமேயாகில் அது நெய்தல் திணைக்குரிய இரங்கல் நிமித்தமாகி விடும். மூன்றாவது நிகழ்ச்சி அதனைத் தவிர்க்க முல்லை நிலத்தின் ஒழுக்கத்தை நிறுவிக்காட்டிதலைமகள் கண்களில் துளிர்ந்த கண்ணீர் வீழ்ந்துபடாமல் கண்களில் உருண்டு திரண்டு நிற்பதாகக் நிறுத்துகிறார் ஆசிரியர்நிகழ்ச்சிகளின் கூட்டம் கதையாக மாறுவதற்கு மேற்க்கண்ட இரண்டு ஒருங்கிணைந்த விதிமுறைகளில் இரண்டுமே சமஅளவில் தேவையா? அல்லது மற்றொன்றை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததா மிகக் குறைந்த அளவிலான கதை என்பதைப் பிரின்ஸ் கீழ்க்கண்டவாறு வரையறை செய்கிறார். மிகக் குறைந்த அளவிலான முல்லைப்பாட்டு கதை என்பது ஒன்றிணையும் மூன்று நிகழ்ச்சிகளை கொண்டிருக்கின்றன. முதல் நிகழ்ச்சியும் மூன்றாவது நிகழ்ச்சியும் நிலை நிறுத்தி மூன்றாவது நிகழ்ச்சியை தவிர்க்க இரண்டாவது நிகழ்ச்சியை இயக்கிக் கொண்டிருக்க வைத்திருக்கிறார் ஆசிரியர். மூன்றாவது நிகழ்ச்சியின் தலைகீழான திருப்புதலாக இருக்கும் இறுதியாக இந்த மூன்று நிகழ்ச்சிகளும் ஒன்றையொன்று இணைக்கம் தன்மை பெற்று ஒன்றிணைணந்த இணைக்கம் தன்மை பெற்ற முறையில் தான் முதல் நிகழ்ச்சி இரண்டாவது நிகழ்ச்சியைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முன் செலுத்துகிறது.

## மாற்றம் மற்றும் எதிர்நிலை (போர்ப் பாசறையில் பெண்கள்)

முல்லைப்பாட்டின் பல்வேறு சிறப்புகளுள், போர்ப்பாசறை அமைப்பு விளக்கத்தையும் அவற்றுள் பயின்று வரும் காவல் முறைகள் பற்றிய பதிவையும் கூறலாம். பொதுவாகப் போர்க்களத்திற்குப் பெண்கள் செல்வதில்லை ஆனால் போருக்குப் பிந்தைய மாற்றம் போருக்கு முந்தைய பாசறையில் பணிகளில் மகளிர் பெரிதும் ஈடுபட்டுள்ளதை முல்லைப்பாட்டு விளக்குகிறது. சிறிய வளையல்களை அவர்கள் முன் கையில் அணிந்திருக்கிறார்கள் அவர்களது கூந்தல் அவிழ்ந்து முதுகிலே கிடக்கிறது அவர்களது இடுப்பிலோ, இரவைப் பகலாகக் காட்டக் கூடிய ஒளி பொருந்திய வாள் தொங்கவிடப்பட்டுள்ளது. பாசறையின் நீண்ட பந்தங்களில் நெருப்பு அணையாமலும், பாவை விளக்கின் கையிலே எரிக்கின்ற விளக்கு அணையாமலும் நெய்வார்த்துப் பார்த்துக் கொள்கிறார்கள் அவர்கள்

"குறுந்தொடி முன் கைக் கூந்தல் அம்சிறு புறத்து

இரவு பகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்" (முல்லை 45-47) என்பது பாடல் வரிகளாகும் ஆண்களின் வீரத்திற்கு உதவியாக இங்கே பெண்களின் நிகழ்ச்சி என்பது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவதால் உண்டாகிறது. இங்கே பெண்களின் வீரமும், கடமையும் நெய்யுமிழ் விளக்கின் வெளிச்சம் போலவும் பரவுவதைக் காண்கிறோம். இதில் பெண்களின் வீரம் ஆண்களின் வீரத்திற்கு எதிர்நிலையாக உள்ளது (Mohan, 2004).

## காரணத் தொடர்பு

சங்க இலக்கியங்கள் அனைத்தும் பரந்துப்பட்ட இரண்டு திணைகளால் அமைகின்றன. ஒன்று வீரமும் வீரம் சார்ந்த புறவாழ்வு குறித்த புறப்பாடல்கள் மற்றொன்று காதலும் காதல் சார்ந்த களவு, கற்பு குறித்த அகப்பாடல்கள் இவற்றுள் முல்லைப்பாட்டு எத்திணையில் அமைகிறது என்று பார்க்குமிடத்து இந்தப் பாடலிலே அகத்திணையும் அடக்கம் புறத்திணையும் அடக்கம், தலைவி, தலைவனைப் பிரிந்து தனித்திருப்பதைக் காரணத் தொடர்பு பற்றி கூறுவதால் இப்பாடல் அகத்திணையாம் மற்றும் போர்க்களத்துப் பாசறை பற்றியும் அதில் தலைவனுடைய பங்கு பற்றியும் கூறுவதால் இப்பாடல் புறத்திணையாம் உள்ளடகத்தால், முல்லைப்பாட்டு அகமும் புறமுகமான திணை மயக்கத்தில் இருந்தாலும் திணைகளின் கூட்டு விகிதங்கள் சரியாய் அமைவதால், இத்திணை மயக்கமே முல்லைப்பாட்டுக்குச் சிறப்பாய் அமைவதைக் காண்கிறோம். தலைவியின் தவிப்பை முதலாவதாகத் தொடர்ப்புபடுத்திக் கொண்டு பாடல்கள் துவங்குவதால் அகத்திணை சார்ந்த தலைப்பாக முல்லைப்பாட்டு என அமைந்ததாகக் கருதலாம்

## இயைபு

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு

வலம்புரி பொறித்த மாதங்கு தடக்கை

நீர்செ நிமிர்ந்த மாஅல் போல

பாடுஇமிழ் பனிக்கடல் பருகி வலன் ஏர்பு

கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழலி

வருதல் தலைவர் வாய்வது நீறின்

பருவரல் எவ்வம் காளைஇமா போய்என

காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து"

இந்தக் கூற்றில் மா, என்பது (திரு) சொல்லை ஒன்றி வருகிறது. அதே முல்லைப்பாட்டில் (காட்டவும், காட்டவும்) என்ற சொல் ஒன்றி வருவதால் இது இயைபுத் தொடையாகும். இந்த இயைபுத்

தொடை (நல்லோர் விரிச்சிக் கேட்டல்(5) மற்றும் தலைவியைத் தேற்றுதல் (கூற்றில் (20) அடிகளில் பயின்று வந்துள்ளது (Mohan, 2004)..

## இடத்தொடர்பு

முல்லை சான்ற கற்பு என்று கற்புடன் தொடர்புபடுத்திப் பேசப்படுவது முல்லைத்திணை. போர் நிமித்தமாகவோ பொருள் தேடல் நிமித்தமாகவோ, தலைவியை விடுத்துப் பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்திற்குள் வந்து விடுவதாகக் கூறிப் பிரிகின்றான். அவ்வாறு வரும் வரை ஆற்றியிருத்தல் தலைவியின் நிலைப்பாடு ஆகும். இதுவே முல்லைத் திணையாகப் பேசப்படுகிறது. இந்த இடத்தொடர்பு இத்திணையின் முதல் பொருளாக உள்ள நிலம் காடுறை உலகம் ஆகும். இந்நிலத்தின் பெரும் பொழுது கார்காலமும் சிறுபொழுது மாலைக்காலமும் ஆகும். மாலைக் காலம் என்பது குறிப்பாக கார்கால மாலைக்காலத்தைக் குறிப்பதாகும் நிலம், காலம், பொருள் ஆகிய இயற்கையின் அடிப்படையில் எழும் மன உணர்வுகளை இந்த முல்லைப்பாட்டு சிறப்பாக சித்தரிக்கின்றது.

“சூழல்கள் மற்றும் செயல்களின் கூட்டு

எடுத்துஎறி எஃகம் பாய்தலின் புண்கூர்ந்து

பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்

பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமிய”

மன்னன் ஒரு கையைப் படுக்கை மேலே வைத்து, கடகம் அணிந்த மற்றொரு கையால் தலையைத் தாங்கியவனாய்ப் போர் மேற் செல்லும் மிக்க விருப்பத்தால் உறக்கம் கொள்ளாமல் இரவு முழுவதும் போர்களக் காட்சிகளை நினைத்தவனாய்ப் படுத்திருக்கிறான் போரில் பகைவர் எறிந்த வேல் பட்டமையால் புண் மிகுந்து தம் பிடி யானைகளையும் மறந்து நின்ற களிறுகளை நினைக்கின்றான் அடிப்பட்ட பாம்பு துடித்தாற் போன்று துடிக்கும் வண்ணம் களிறுகளின் பெரிய கையினை வெட்டி வீழ்த்தித் தாம் அணிந்த தேன் துளிக்கும் வஞ்சி மாலைக்கு வெற்றியைத் தேடித் தந்து செஞ்சோற்றுக் கடன் கழித்துப் போரில் வீழ்ந்துப்பட்ட வீரரை நினைக்கின்றான் காவலாயக் காதோரம் அணிவித்த தோற்பரிசையினையும் அறுத்துக் கொண்டு பாய்ந்த கூர்மையான அம்பு நுனிகள் அழுந்துவதால் இதம் செவியைச சாய்த்துப் புல் உண்ண இயலாமல் வருந்தும் குதிரைகளையும் நினைக்கின்றான். இங்ஙனம் பலவற்றையும் நினைத்து வருந்துவதால் உறக்கம் கொள்ளாமல் தவிக்கின்றான். வஞ்சிப் போருக்குச் சென்றுள்ள முல்லைப்பாட்டுத் தலைவனின் பாசறைக் கோலச் சூழலையும் போர்க்களக் காட்சி நிகழ்வினை நினைத்து போரில் இறந்த வீரர் மற்றும் விலங்குகளின் சூழல்களையும் எண்ணியத் தலைவன் இன்னொருப் புறம் தலைவனின் செயல் பாசறைக் கண் படுக்கையிற் சிந்தித்வாறு இருக்கும் ஒரு மன்னனைக் கண் கூடாகக் காட்டும் சொல்லோவியமாக இருக்கின்றன. இந்த செயல் திருமால் பள்ளிக் கொண்ட கோலத்தையும் நினைவில் நிறுத்துகிறது” (Mohan, 2004).

## கதை மாந்தர்கள்

இந்நூலில் நிகழ்வுகள் நடைபெற வழிவகுக்கும் கதை மாந்தர்கள் மூன்று வகைப்பட்டவர்கள் மொத்தக்கதைமாந்தர்கள் 1.மன்னன், 2.அரசி, 3.பெருமுதுப்பெண்டிர் (செவிலித்தாய் மற்றும் நற்றாய்), 4.ஆய்மகள், 5.கோவலர், .பாகர், 7.பாசறைமகளிர், 8.பெருமூதனார் (முதிய ஆண்கள்), 9.பொழுதறிந்து சொல்லுபவர், 10.யவனர், 11.மிலேச்சர், 12.தானையர், வேடுவர் இவர்களுள் மன்னனும் அரசியும் முதன்மைக் கதைமாந்தர்கள், பெருமூதுப் பெண்டிர் முதலாக மிலேச்சர் வரை அனைவரும் துணைமைப் பாத்திரங்கள் படையில் உள்ளவர்களும் எதிரியின் வேடுவர்களும் தோன்றாக் கதைமாந்தராய் உள்ளார். இந்நூலில் எதிர்நிலைக் கதைமாந்தர்கள் எவருமிலர்.

## முடிவுரை

முல்லை நிலத்துக் கார்காலமும் மாலைப்பொழுதும் அரண்மனையும் காடும் காட்டரண்களும். ஆயர் இல்லங்களும் நூலின் இயங்கு வெளியாக உள்ளன. மூன்று காலங்கள் நிகழ்வுகள் நடந்தவனாகக் காட்டப்பட்டுள்ளன. பாசறைக் காட்சிகளும் தலைவியின் ஆற்றாத நிலையும் நான்கு மலர்களும் தொகுத்துச் சொல்லும் எடுத்துரைப்பியலாக அமைந்துள்ளன. நப்பூதனார் தலைவியின் நிலையைக் காட்டிய விதம், கம்பருக்குச் சீதையைக் காட்டப் பயன்பட்டுள்ளது.

## References


Balasubramanian, K.V. (2004) Pathupattu, New Century Book House, Chennai, India

Mohan, R. (2004) Pathupattu, New Century Book House Pvt. Ltd, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License